2007 ஜனவரி 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. முடிந்தது, முடிந்தது. இரண்டு issue–விற்கு மேலே எடுக்க முடியாது. (குறுக்கீடு) முடிந்தது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இரண்டு issue–விற்கு மேலே எடுக்க முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: அப்படியென்றால் சனிக்கிழமை எடுத்துக்கொள்ளலாம். சனிக்கிழமையாவது எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்க்கலாம். அதைப் பார்க்கலாம்.

முற்பகல் 10–55

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய பத்தொன்பது முதல் இருபத்து ஐந்து வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மனுக்கள் குழுத் தலைவர். (குறுக்கீடு)

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஒன்று முதல் ஆறு வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று